உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் வல்லமை ஊழியங்கள்

# பேசுதல் 2



Compiled by
**P. Isaac Chandran**

இனிய சொற்கள் தேன்கூடுபோல் ஆத்துமாவுக்கு மதுரமும், எலும்புகளுக்கு ஔஷதமுமாகும்.
நீதிமொழிகள் 16:24

கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்?

உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன்தானே.

அவன் தன் நாவினால் புறங்கூறாமலும், தன் தோழனுக்குத் தீங்குசெய்யாமலும், தன் அயலான்மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமலும் இருக்கிறான்.
சங்கீதம் 15:1,2,3

என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.
சங்கீதம் 19:14

உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள்.
சங்கீதம் 34:13

கர்த்தாவே, பொய் உதடுகளுக்கும் கபடநாவுக்கும் என் ஆத்துமாவைத் தப்புவியும்.
சங்கீதம் 120:2

வாயின் தாறுமாறுகளை உன்னை விட்டகற்றி, உதடுகளின் மாறுபாட்டை உனக்குத் தூரப்படுத்து.
நீதிமொழிகள் 4:24

பகையை மறைக்கிறவன் பொய் உதடன்: புறங்கூறுகிறவன் மதிகேடன்.
நீதிமொழிகள் 10:18

நீதிமானுடைய நாவு சுத்தவெள்ளி: துன்மார்க்கனுடைய மனம் அற்ப விலையும் பெறாது
நீதிமொழிகள் 10:20

நீதிமான்களுடைய உதடுகள் பிரியமானவைகளைப்பேச அறியும், துன்மார்க்கருடைய வாயோ மாறுபாடுள்ளது.
நீதிமொழிகள் 10:32

மாயக்காரன் தனக்கு அடுத்தவனை வாயினால் கெடுக்கிறான்: நீதிமானோ அறிவினால் தப்புகிறான்.
நீதிமொழிகள் 11:9

பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்: உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்.
நீதிமொழிகள் 12:22

மனுஷருடைய இருதயத்திலுள்ள கவலை அதை ஒடுக்கும்: நல்வார்த்தையோ அதை மகிழ்ச்சியாக்கும்.
நீதிமொழிகள் 12:25

சகல பிரயாசத்தினாலும் பிரயோஜனமுண்டு: உதடுகளின் பேச்சோ வறுமையை மாத்திரம் தரும்.
நீதிமொழிகள் 14:23

மாறுபாடுள்ளவன் சண்டையைக் கிளப்பிவிடுகிறான்: கோள் சொல்லுகிறவன் பிராண சிநேகிதத்தையும் பிரித்துவிடுகிறான்.
நீதிமொழிகள் 16:28

மேன்மையானவைகளைப் பேசும் உதடு மூடனுக்குத் தகாது; பொய் பேசும் உதடு பிரபுவுக்கு எவ்வளவேனும் தகாது.
நீதிமொழிகள் 17:7

மூடனுடைய உதடுகள் விவாதத்தில் நுழையும், அதன் வாய் அடிகளை வரவழைக்கும்.
நீதிமொழிகள் 18:6

வழக்குக்கு விலகுவது மனுஷனுக்கு மேன்மை: மூடனானவன் எவனும் அதிலே தலையிட்டுக்கொள்வான்.
நீதிமொழிகள் 20:3

அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக.
கொலோசெயர் 4:6

நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப்பேசு.
தீத்து 2:1

விசேஷமாய், என் சகோதரரே, வானத்தின்பேரிலாவது, பூமியின்பேரிலாவது, வேறெந்த ஆணையினாலாவது சத்தியம்பண்ணாதிருங்கள். நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லக்கடவீர்கள்.
யாக்கோபு 5:12

ஆம்! கர்த்தருடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ண வேண்டுமா!
உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேசுவோம். கர்த்தருக்கு அருவருப்பான பொய் உதடுகளை தவிர்த்து உண்மையாய் நடப்பதே அவருக்குப் பிரியம்.

நம் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக. நாம் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுவோம்.

*******************